# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-2 Date : 08.04.2025
Case No. : **O.S. 492/2019** Nationality : Indian
Name : பிரபாகரன் (கிராம நிர்வாக அலுவலர், கதிராமங்கலம் கிராமம்) Religion :
Age : 31
Father's/Husband's Name :
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் கூடுதல் முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது கதிராமங்கலம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு வேப்பத்தூர் 2 கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். கூடுதல் பொறுப்பாக அணக்குடி கிராமத்தில் பணியாற்றி வந்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 08.11.2022 ம் தேதியிட்ட 1431 பசலிக்கான அடங்கல் என்னால் வழங்கப்பட்டதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ( மேற்படி அடங்கல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்காக வந்த அழைப்பாணையை எடுத்து வந்துள்ளேனா என்றால் அழைப்பாணை வந்தது, எடுத்து வரவில்லை. ஏற்கனவே இதே வழக்கு சம்மந்தமாக நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். அப்போது 08.11.2022 ம் தேதி நான் வழங்கிய சான்று குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி சா.சா.ஆ.1 சான்று ஆவணத்தில் 1432 பசலிக்காக வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 அடங்கல் 1431 பசலிக்காக வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அடங்கலில் முந்தைய பசலி குறிப்பிட்டு வழங்கப்படும். சான்றில் நடப்பு பசலி குறிப்பிட்டு வழங்கப்படும். வா.சா.ஆ.8 அடங்கலில் உள்ள சான்றில் பரப்பளவு அடித்தல் திருத்தல் செய்யப்பட்டு அதில் நான் மேலொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் கீழே கையொப்பம் செய்துள்ளேன். சா.சா.ஆ.1 சான்றில் 6 மற்றும் 7 காலம் அடிக்கப்பட்டு மேலொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.1 சான்றில் நான் என்ன தேதி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சீல் வைக்கப்பட்டுள்ளதால் என்னால் தேதி படித்து பார்க்க முடியவில்லை. வா.சா.ஆ.8 அடங்கலில் காலம் எண் 7 ல் சாகுபடி செய்பவரின் விவரத்தை நான் பூர்த்தி செய்யவில்லை என்றால் காலம் 7 ல் பொதுவாக எழுதுவதில்லை. அதற்கு பதிலாக கீழே சான்றாக வழங்கப்படும். மேற்படி காலம் 7 ல் அவ்வாறு சான்று கீழே எழுதப்பட்டுள்ளது என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி காலம் 7 ல் சாகுபடி செய்பவரின் விவரம் குறிப்பிடப்பட்டிருந்தால் அவரது பெயர் குத்தகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். யார் சாகுபடி செய்கிறார்கள் என்பது பற்றி நேரடியாக தெரியாமல் வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.04.08 16:57:51 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.